1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினா 235 ஒத்தி வைக்கப்படுகிறது. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) பிரதியை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 25ஆம் தேதி வந்திருக்கிறது. கொஞ்ச அவகாசம் கேட்டிருக்கிறார்கள். பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, விதி 43ன் பிரகாரம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இன்றைய தினம் வருமென்று சொன்னார்கள். அது ஒரு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது அவையின் முன்னவருக்குத் தரப்பட்டிருக்கிறது. விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். இன்றைக்கில்லை. தகவல் சேர்ந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

3. அரசின் தீர்மானம்.

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

4. அரசின் சட்ட முன்வடிவு

1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடி நீர் வழங்கல் —கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1978)

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப் பட்ட 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் - கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1978) ஆய் விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. டி'மாண்டி பேசலாம்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரை தரட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் வரும் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றின் குடி நீர் வழங்கும் பணியையும், சாக்கடை நீர் அகற்றும் பணி யையும், சென்னை மாநகராட்சியும் சம்பந்தப்பட்ட உள் ளாட்சி மன்றமும் கவனித்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், உலக சுகாதார நிறுவனம், இந்திய அரசு ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந் தத்தின்படி, சென்னை பெருநகர்ப் பகுதி முழுவதிலும் குடி நீர் வழங்கு - கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு முதலீடு செய் வதற்கு முன்னர் ஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அனுமதித்தது. நிறுவன அமைப்பு, நிர்வாகம், நிதி விவ காரங்கள் குறித்து ஆலோசனை வழங்கவும், சென்னைப் பெருநகர்ப்

@462-524 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.